★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 17உ புதன் (30—5—56) ★ ★ வெளியூர்: வைகாசி 18உ வியாழன் (31—5—56) [இதழ் [illegible]

எல்லோரும் 'சத்தியாகிரகி'களா?

புதுடில்லி, மே 29—

'சத்தியாக்கிரகி' என்ற சொல்லைக் கேட்டு, கேட்டு அலுத்துப் போய்விட்டதாக, மக்கள் சபையில், பண்டித நேரு கூறியிருக்கிறார்.

'இந்தியாவில் உள்ள ஒவ்வொருவரும் சத்தியாக்கிரகிகளா?— கல்லெறிகிற ஒவ்வொருவரும் சத்தியாக்கிரகி! சட்டத்தை உடைக்கிற ஒவ்வொருவரும் சத்தியாக்கிரகி! பிறர் மண்டையை உடைக்கிற ஒவ்வொருவரும் சத்தியாக்கிரகி!—இப்படி, 'சத்தியாக்கிரகி' என்ற சொல்லை இங்கு தவறான முறையில் உபயோகிப்பது விநோதமாக இருக்கிறது" என்று அவர் அங்கலாய்த்துக்கொண்டாராம்!

சிப்பாய்களை பொறுக்குவதில் ஓரவஞ்சனையா?

இராணுவ அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் பாரபட்சமா?

திறமை பெயரால் நடத்தப்பட்டுவரும் தில்லுமுல்லு!

புதுடில்லி, மே 29—

இராணுவ சிப்பாய்களைத் தேர்ந்தெடுப்பதில், ஏற்கனவே திருப்திகரமான முறையைக் கையாளத் தவறிய பகுதிகளுக்கு, குறிப்பிட்ட வகையில் கருத்தைச் செலுத்த வேண்டுமென்று, ஆங்காங்கே இருந்துவரும் சிப்பாய்களைப் பொறுக்கி எடுக்கும் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்து இருப்பதாக, மக்கள் சபையில், துணை பாதுகாப்பு மந்திரி அறிவித்துள்ளார்.

இராணுவ அதிகாரிகளைப் பொறுக்கி எடுப்பதில்' திறமையை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிப்பாய்களைப் பொறுக்குவதற்கான புதிய கட்டளை பிறப்பிக்கப்பட்டதற்குப் பிறகு, இராணுவத் துறையில் சென்னையின் பங்கு, 1954-ல் இருந்ததைவிட 20 சதவிகிதம் உயர்ந்து இருப்பதாக அவர் அறிவித்தார்.

திரு-கொச்சியின் பங்கும் பத்து சத விகிதம் அதிகரித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"இராணுவ அதிகாரிகள் நியமனம் பற்றி, சுதந்திரமடைந்ததற்குப் பிறகு தென்னிந்தியாவின் பங்கு குறைக்கப்பட்டு இருக்கிறதா?"

என்ற கேள்வியை தென்னிந்திய உறுப்பினர் ஒருவர் கேட்டார்.

"அவ்வாறு குறைக்கப்பட்டு இருக்கிறதா என்பதை நான் சந்தேகிக்கிறேன். தென்னிந்திய மக்கள் நன்கு கவனித்துக் கொள்ளப்படுகின்றனர் என உறுதியாக நம்புகிறேன்.

"இராணுவ அதிகாரிகள் நியமனம் திறமையை மட்டுமே கருத்தில் கொண்டு நியமிக்கப்படுகிறது என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்,"

எனத் துணை அமைச்சர், திறமையின் பெயரால் இராணுவத்திற்கு அதிகாரிகளைப் பொறுக்கும் விஷயத்தில் தென்னிந்தியாவிற்குப் பாரபட்சம் காட்டப்பட்டு வருகிறது என்பதை மறைமுகமாக ஒப்பாமல் ஒப்பி இருக்கிறார்.

தென்னாட்டிற்கு உறுதியளிக்கிறார்!

மத்திய உணவு அமைச்சரின் தாராளமே தாராளம்!

சென்னை, மே 29—

திரு—கொச்சி உட்பட தென்னாட்டின் பல முக்கிய நகரங்களுக்குத் தேவையான அரிசி உடனடியாக அனுப்பிவைக்கப்படுமென மத்திய உணவு அமைச்சர் ஏ. பி. ஜெயின் தெரிவித்துள்ளார்.

மணங்கு ரூ 16 வீதம் மோட்டா ரக அரிசி, இம்மாநிலத்திற்குத் தேவைப்படும் அளவிற்குச் சர்க்கரால் விடுவிக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த அறுவடை வரையில், சென்னை, கோழிக்கோடு, சேலம், திருச்சி, தூத்துக்குடி, கோவை ஆகிய இடங்களுக்கு இந்த அரிசி அனுப்பப்பட்டுச் சேமித்துவைக்கப்படுமாம்.

'அரிசி விலைகள் இறங்குமுகமாகக் காணப்படுகிறது; ஆகவே, இனித் தொல்லைகள் ஏதும் இருக்காது' என்று அவர் நம்பிக்கைக் கொண்டார்.

இறக்குமதி செய்யப்பட்டுள்ள 7,000 டன் சர்க்கரையும், கல்கத்தாவிலிருந்து தென்னாட்டிற்கு விரைவிலேயே வரக்கூடுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டக்காரர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

அம்பாலா, மே 29—

அம்பாலாவிலிருந்து 35 மைல் தொலைவிலுள்ள காக்கா இரயில்வே தொழிற்சாலையில் ஆர்ப்பாட்டம் செய்த ஒரு கூட்டத்தினர்மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவால் ஆர்ப்பாட்டக்காரர்களில் நால்வர் இறந்து விட்டனரென்றும், எழுவருக்கு காயமென்றும் செய்திகள் கூறுகின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது கண்ணீர்ப்புகை வீச்சு

செயிண்ட் நாசிர், மே 28—

அல்ஜீரியாவில் நடைபெறும் உரிமைக் கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்காகப் புறப்படவிருந்த 200 பிரெஞ்சுத் துருப்புகளை, ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தினராம்.

பிரெஞ்சுத் துருப்புகள் புறப்படவிருந்த இரயிலை கிளர்ச்சிக்காரர்கள் மறித்துவிட்டனரென்றும், அவர்கள்மீது 1,000 போலீசார் கண்ணீர்ப் புகையைப் பயன்படுத்திக் கலைத்தனரென்றும், [illegible] கிளர்ச்சிகளுக்கு கம்யூனிஸ்டுகள் ஏற்பாடு செய்தனரென்றும் செய்திகள் கூறுகின்றன.

'கவலைப்பட வேண்டாம்'

காஷ்மீர் பற்றி நேரு

காஷ்மீர்பற்றிய இந்தியாவின் கொள்கை நிலையாகவே இருப்பதாகவும், இதைப் பற்றி [illegible] கவலைப்பட வேண்டாம் என்றும் பிரதமர் நேரு [illegible] உறுப்பினர்களுக்குத் [illegible] தெரிவித்தார்.

கூறிய கொள்கைகளுக்குத் துரோகம் இழைத்த இந்திய கம்யூனிஸ்டுகள்

ரஷ்யா சொன்னதையே திரும்பச் சொல்லும் கிளிப் பிள்ளைகள்

சுதந்திரத் தனியரசு அமைத்துக்கொள்ளும் உரிமை

தேசீய இனங்களுக்கு வேண்டும் என்றனர்

இன்று அந்த உரிமை கோருவதே தீது என்கின்றனர்

எந்தப் பிரச்னையில்தான் நிலையான கொள்கை கொண்டவரோ ?

கம்யூனிஸ்டுகளின் கொள்கைக் குழப்பம் குறித்து

ஈ.வெ.கி. சம்பத் ஆய்வுரை

"தென்னாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு முன்பே கம்யூனிஸ்டுகள் தோன்றியிருந்தனர். அவர்கள் தோன்றிய அந்த நாட்களில் எல்லாம் அகில இந்திய ரீதியில் தங்களுக்கென ஒரு கொள்கை வகுத்துக் கொண்டிருந்தார்கள்.

"அன்று அவர்கள், இந்தியாவில் உள்ள பல்வேறு மொழி பேசுகிற மக்களுக்கும், சுயநிர்ணய அடிப்படையில், இந்திய யூனியனிலிருந்து பிரிந்துபோகும் உரிமை வேண்டும் என்று வாதாடி வந்திருக்கிறார்கள்.

"இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினர் நடத்திவந்த தங்களின் (People's War) 'மக்கள் யுத்தம்' என்ற பத்திரிகையில் இது பற்றி எழுதியிருக்கிறார்கள். 'மக்கள் யுத்தம்' என்ற பெயரே, ஒரு கொள்கைக் குழப்பத்தின் அறிகுறியான பெயர்!

அந்தப் பத்திரிகையின், 1942-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 9-ந்தேதிய இதழில் ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. அந்தத் தலையங்கத்தில் உள்ளதை நான் உங்களுக்கு எடுத்துக் கூறுகிறேன்.

"............இந்தியாவைப் பிரிப்பது என்பது பெரும் பாபம் என்று காந்தியார் கூறுகிறார்; காந்தியாரின் அபிப்பிராயம், தேசீயத் தலைமையின் ஒருமுகப்பட்ட அபிப்பிராயமாகும்; ஆகவேதான், பிளவு அதிகரிக்கும் முன்பு, பிளவிற்கு ஒரு மேல்பாலம் போடவேண்டியது பொறுப்புள்ளவர்கள் செயலாகும். விடுதலை பெற்ற இந்தியாவில், மைனாரிட்டி இனத்தவரின் உரிமைகளைப் பறித்து, மெஜாரிட்டி இனத்தவர் அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்துகிற நிலைமை கூடாது என்று, தேசியக் கருத்துடையோர் உரத்த குரலில் கூறிவருகின்றனர். ஆனல், மெஜாரிட்டியினரின் கொடுமைக்கு ஆளாகி யிருக்கிற மைனாரிட்டியினர், இப்படிப்பட்ட வாய் வார்த்தைகளினால் திருப்தி அடைந்துவிட முடியாது. துளிகூட அச்சமில்லாத நிலை, அவர்களுக்கு ஏற்படுத்தித் தரப்பட்டாக வேண்டும். அதன் சமநிலை 'எல்லோருக்கும் எளிதில் புரியக் கூடிய வகையில், வகுத்துத் தரப்படுதல் வேண்டும்; மைனாரிட்டியினருக்கு, பிரிந்து போகிற உரிமை தரப்பட வேண்டும்—அதாவது, சுதந்திரத் தனிஅரசை அவர்கள் நிறுவிக் கொள்ளத் தேவையான உரிமை அவர்களுக்குத் தரப்பட வேண்டும்;

"முஸ்லிம்களின் புதிய விழிப்புணர்ச்சியையும், ஆந்திரர்—கர்நாடகர்—மராட்டியர் ஆகியோரிடை தோன்றியுள்ள புதிய தேசீய இனவிழிப்புணர்ச்சியையும் அசட்டை செய்வது பெரியதொரு அரசியல் அபத்தமாகும். அப்படி அசட்டை செய்வது, பெரும் ஆபத்தில் கொண்டுபோய் விட்டுவிடும்."

இது, 'மக்கள் யுத்தம்' இதழில் காணப்படும் தலையங்கத்திருப்பவையாகும்.

"பல்வேறு தேசீய இன மக்களுக்கும் பிரிந்துபோகிற உரிமை தரப்படவேண்டும்—என்று, 1942-ல் பேசினர்கள் கம்யூனிஸ்டுகள்; பிரிந்துபோகிற உரிமை என்றால், எவருக்கேனும விளங்காமல் போய்விடுமோ என்று நினைத்து, இவர்களே விளக்கம் கூறியிருக்கிறார்கள் — 'பிரிந்துபோகும் உரிமை என்றால், சுதந்திர தனியரசை நிறுவிக்கொள்வது'—என்று!

"அதே 'மக்கள் யுத்தம்' பத்திரிகையின் 1944-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ந் தேதி வெளிவந்த இதழில், 'முஸ்லிம் அல்லாதவர் உள்ளத்தில், முஸ்லிம்களின் கோரிக்கையான பாகிஸ்தான் அமைவது—இந்தியாவிலிருந்து பிரிவது நியாயம், நியாயம் என்ற உணர்வு வலுத்து வருகிறது' என்றும் எழுதிக் காட்டியிருக்கிறார்கள், கம்யூனிஸ்டுகள்!

"முஸ்லிம்களின் பாகிஸ்தான் கோரிக்கை நியாயமானது; ஆந்திரர்கள், கன்னடியர்கள், மராட்டியர்கள் இவர்களைப் போன்ற தேசிய இனத்தவர்கள் (இந்திய யூனியனிலிருந்து) பிரிந்துபோக வேண்டும் என்று விரும்பினல்—தனி அரசு அமைத்துக்கொள்ள வேண்டும் என்று விழைந்தால், அவர்களுக்கு அந்த உரிமை வழங்கப்படுதல் வேண்டும்—என்றெல்லாம் கம்யூனிஸ்டுகள், 1942-ல் கூறினர்கள்; 1944-ல் கூறினர்கள்; 1946 வரை கூறினர்கள்.

"பின்னர் 1947-ல் பேந்தப் பேந்த விழித்தார்கள்; 1948-ல் அவர்கள் நிலைமாறியது — நிலைகுலைந்தது; 1949-ல் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி, 'இந்தியாவை மீண்டும் துண்டாடவேண்டும்—திராவிடத் தனி அரசு அமைக்கவேண்டும்' என்று முழக்கமிட்டவண்ணம், ஓங்கி வளரத் தலைப்பட்டது. அப்படி வளர்ந்து, நாட்டு மக்களிடையே அது வலுப்பெற்றுவிட்ட பேருருவத்தைக் கண்டபோது, தங்களுக்கு ஏற்பட்ட மிரட்சியினல் நிலைகுலைந்த கம்யூனிஸ்டுகள், குழம்பிப்போனர்கள்.

"அந்தக் குழம்பிய நிலையில், அகில இந்திய ரீதியில் இயங்கும் அவர்கள், வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு தாங்களும் 'சாய்காலாக' இருக்கவேண்டும் என்று கருதத்தலைப்பட்டனர். உடனே, 1942-ல் எதை எதை வலியுறுத்தினர்களோ,

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ் நாடு

சென்னை 30-5-'56 புதன்

முதலமைச்சர் மிடுக்கு!

" தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்னுடகம் மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபட்டு, பிரிந்து போகும் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய திராவிட சமதர்மக் குடியரசு ஆட்சியை ஜனநாயக முறையில் அமைத்தல் வேண்டுமென்று எல்லா மாநாடுகளிலும் வலியுறுத்தி வந்துள்ள நமது கழகத்தின் குறிக்கோளை மீண்டும் இம்மாநில மாநாட்டில் வலியுறுத்துவதுடன், இந்திய அரசியலார் இனியாவது இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இம் மாநாடு நினைவூட்டுகிறது."

இந்தத் தீர்மானம், திரிசிரபுரத்தில் நடைபெற்ற நமது மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

திராவிட நாட்டு அமைப்பின் தன்மை, அமைய வேண்டிய முறை, அடிப்படை இலட்சியம், எல்லை ஆகிய அனைத்தும் கனம் காமராசர் போன்றவர்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில், நமதுஇலட்சியத் தீர்மானத்தில் அடங்கி இருக்கிறது.

தெளிவாகத் தரப்பட்டுள்ள இதைக்கூட புரிந்து கொள்ளும் ஆற்றல் அற்றவராக கனம் காமராசர் இருப்பார் என்று எவரும் இதுவரை எண்ணி இருக்க முடியாது. ஆனுல், தெளிவாகத் தரப்பட்டுள்ள நமது இலட்சியத் தீர்மானத்தையும் அறிந்து கொள்ள முடியாதவராக தாம் இருக்கிருர் என்பதை, தாமே முன்வந்து அறிவித்திருக்கிருர். இத்தகைய அறிவுசான்ற கனவானின் ஆட்சியில் நாமும் குடிமக்களாக வாழ்ந்து வருகிருேம்!

திராவிட நாட்டுக்குரிய எல்லையை நாம் வரையறுத்துக் கூறினது கிடையாதாம். அதன் ஆட்சி அமைப்பு எவ்வாறு இருக்கும் என்பதையும் நாம் விளக்கிக் கூருது இருந்து வருகிருேமாம். இந்த இரண்டு குற்றச்சாட்டையும் முதலமைச்சர் நம்மீது சுமத்தி, தமது புல்லறிவின் விக்கத்தை நாட்டுக்கு அறிவித்துக் கொள்ளுகிருர்.

தலைப்பில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நமது இலட்சியத் தீர்மானத்திலேயே, அவர் நமமிடம் காணுவதாகக் குறிப்பிடும் இரண்டு குறைபாடுகளுக்கும் பதில் இருக்கிறது. அதை, இதுவரை அவர் பார்க்காமலே பேசி வந்ததாக இருந்தாலும், இனியாவது, தீர்மானத்தை முழுதும் கற்றறிந்து அல்லது கற்றவரிடம் கேட்டறிந்து, திராவிட நாடு பற்றிய உண்மையை அவர் உணர்ந்துகொள்ள முன்வர வேண்டும்.

திராவிட நாட்டின் எல்லை தெரியாத காரணத்தாலும், ஆட்சி அமைப்பு எவ்வாறு இருக்கும் என்பது தெரியாத காரணத்தாலுமே, தாம் நாட்டுப் பிரிவினையை எதிர்த்து வருவதுபோல் பொருள்படும்படியாக முதலமைச்சர் திருச்சியில் பேசி இருக்கிருர். எல்லையையும், ஆட்சி முறையையும் அறிந்து கொண்டதும் நமது திராவிட நாடு இலட்சியத்தை ஆதரிக்க முதலமைச்சர் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பிவிடுவார் போலும்!

முதலமைச்சர் காமராசர் ஒத்துழைப்புடன் திராவிட நாடு பெற்ருக வேண்டும் என்ற துர்ப்பாக்கிய எண்ணத்தில் திராவிடப் பெருங்குடி மக்கள் இருக்கவில்லை. அதற்கான தன்மானம் அவர் குருதியில் கலந்திருப்பதாக, நாம் கூற முன்வந்தாலும் திராவிட மக்கள் ஒப்பார் என்ற உண்மையை முதலமைச்சர் தெரிந்திருப்பது நல்லது.

'வரி விதிக்காமல் இவர்கள் நாடாளுவார்களா?' என்ற வினவைக் கேட்டு, தெருக்கூத்தில் வரும் கட்டியக்காரன் கீழ்த்தரமான சொற்களை உச்சரித்து, கூத்துப் பார்க்கிறவர்களிடம் சிரிப்பைமூட்ட முயலுவதுபோல், முதலமைச்சரும் கூட்டத்திலிருந்த சிலரை சிரிக்கவைக்க முயன்று இருக்கிருர்.

வரி விதிக்காமல் நாடாள, முன்னேற்றக் கழகத்தவர்கள் என்ன, அஷ்டமாசித்துக்களைப் பெற்று இருப்பவர்களா? மகாத்மாவின் பரம்பரையினராகவோ, அருளாளர்களின் அடிவருடிகளாகவோ நாம் இருப்பவர்கள் அல்லவே! அவ்வாறெல்லாம் அற்புதம் புரியும் ஆற்றல் பெற்றிருப்பவர்கள் எனத் தங்களைத் தாங்களே கூறித் திரிபவர்களும், மக்களை நம்பச் செய்து வருபவர்களும் முதலமைச்சர் கோஷ்டியினர் தானே?

வரி விதிக்காமல் எவரும் ஆட்சி செய்ய முடியாது என்பது உலகறிந்த உண்மை. இவ்வாறு ஒரு அரசியல் கட்சியைப் பார்த்துக் கேட்டதே, கேட்டவரின் மூளைக் கோளாறை மெய்ப்பித்துக் காட்டுவதாகும்.

நமது கழகத்தாரும் வரிவிதிக்கத்தான் செய்வார்கள். ஆனுல் அந்த வரி விதிப்பு, வரிச் சுமையைத் தாங்கக் கூடியவர்களுக்கு மட்டுமே விதிக்கப்படும் வரியாக இருக்கும். இந்த உண்மையையும் முதலமைச்சர் உணர்ந்துகொள்வது நல்லது.

கோயில் சொத்துக்களை நாம பறிமுதல் செய்துவிடுவோம் என்றப் பூச்சாண்டியையும் முதலமைச்சர் கிளப்பிவிட்டிருக்கிருர். கோயில்களுக்கு உபரியாகக் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு, பள்ளிகளை நடத்துவதும், அறுதை விடுதிகளை ஏற்படுத்துவதும் நியாயமானதாகும் எனக் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியின் சார்பில் முதலமைச்சராக இருக்கும் ஒருவரிடம் இருந்துதான், இந்தப் பூச்சாண்டி கிளம்புகிறது!

ஆலயச் சொத்துக்கள் மக்களுக்குச் சொந்தம். மக்கள் முழு விருப்புடன், அவைகளை மக்களின் நல்வாழ்விற்காகப் பயன்படுத்த எடுத்துக் கொள்வதை, பறிமுதல் எனக் கூறுவதற்கு எந்த நீதித்துறையிலும் நியாயம் கிடையாது. மக்களாட்சிக்கு மக்களே அடிப்படை என்ற தத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், மக்கள் முடிவிற்கு மாசு கற்பிக்க முந்துவது அறிவுடைமையாகாது.

நாம் அனைவரும்நாடகக்காரர்களாம். இராஜா-மந்திரி வேஷம் போட நாம்ஆசைப்படலாமாம். எனவே, நாடகக்காரர்களாகிய நாம் நாடாள ஆசை கொள்ளக் கூடாதாம்! திருச்சியில், இப்படி முழங்கி இருக்கிறது, முதலமைச்சர் போர்வையில் உலாவும் முடத்தெங்கு!

எழுத்தறிவு, வரலாற்றறிவு, நிலநூல் அறிவு, நிர்வாக அறிவு எதுவும் அற்றத் தாம் முதலமைச்சராகப் பதவியிலிருப்பதை ஒப்புக்கொண்டுள்ள மக்களைப் பார்த்து, மேற்குறித்தவாறு எனனம் பேசாது கனம் காமராசரால் எவ்வாறு இருக்கமுடியும்? அவர் போன்ருரும் ஆட்சிப் பொறுப்பில் விற்றிருக்க முடியும் என்பதை ஒப்புக்கொண்டுள்ள மக்களை, அவர் அலட்சியமாகக் கருதி பேசுவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

நாடகக்காரர்கள் நாடாளக் கூடாது என்ற கோட்பாடு எந்த நாட்டிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்திய அரசியல் சட்டத்தில்கூட நாடாள்வதிலிருந்து நாடகக்காரர்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக் காணேம். ஆனுல் முதலமைச்சர் காமராசரோ, 'நாடகக்காரர் நாடாள்வதா?' எனக்கேட்டு கொக்கரிக்கிருர்.

நாடகக்காரர்களைக் குறித்து, மதிப்புக் குறைவாக, காமராசர் பேசி இருப்பதற்கு, நாடகக் கலைஞர்கள் பதில் கூறிக் கொள்வர். இவ்வகையில் நமது உதவியை நாடித் தீரவேண்டிய அளவிற்கு, நாடகக் கலைஞர்கள் இருக்கவில்லை. தங்களைக் கேலி பேசும் முதலமைச்சரின் வாய்க்கு, நாடகக் கலைஞர்களே மூடிபோடுவர் என்பதில் எவரும் ஐயங்கொள்ளத் தேவை இல்லை.

காங்கிரஸ் கட்சியின் ஆளும் திறமை பற்றி நாம் சொல்லாமல் இருப்பதே நல்லது. அமைச்சர் அவைக்குள்ளாக நிலவி இருக்க வேண்டிய கருத்து ஒற்றுமை, காமராசர் அவையில் எவ்வாறு இருக்கிறது என்பது நாடறிந்த உண்மை. அந்தச் சீரழிவை செப்பனிட்டுக்கொள்ள முடியாத இந்த சிலர்தான், 'நாடகக்காரர்களா நாடாள்வது?' எனக் கேட்க முன்வந்துவிட்டார்.

காமராசர் மிடுக்கு இனியும் நீடித்து இருக்காது என்ற உண்மை தினந் தினம் அம்பலமாகிக் கொண்டு வருகிறது. உள்ளுக்குள்ளாக இருந்தே சொந்தக் கட்சியினர் அம்மிடுக்கை விளுடிக்கு விளுடி சரித்துக் கொண்டு வருகின்றனர். இந்த இலட்சணத்தில் நம்மீது வேறு பாய்ந்து காமராசர் பல்லுடைத்துக் கொள்ளப் பார்க்கிருர். அந்தோ! பரிதாபம்!

பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை, 1956 அக்டோபருடன் முடிவடைகிற அதன் முதலாவது உற்பத்தி ஆண்டில் அந்த ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த பிரயாணிப் பெட்டி உற்பத்தி இலட்சிய அளவைப்போல் இருமடங்கு உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டெல்லி—மந்திரிகளின் கூடாரம்!

விவகாரங்கள் அனைத்திற்கும் அங்கேதான் பரிகாரமா?

அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

மைசூர் முதன் மந்திரி குரல் கொடுக்கிருர்

பெங்களூர், மே 28—

"குடும்பத் திட்டம் முதல் மரண வரி விதிப்புவரை, கொள்கை வகுப்பவர்களாக யார் விளங்குகிருர்கள்? டில்லி சர்க்கார்தானே!"

என்று கேட்கிருர், மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா!

"டில்லி, ஒரே மந்திரிகளின் மயமாக—முகாமாக இருக்கிறது; ஒவ்வொரு மந்திரி சபையும், அந்தந்தத் துறையில் முழு அதிகாரம்—சர்வ சுதந்திரம் பெற்றவையாயிருக்கின்றன; ஆனுல், இவற்றிடையே, தங்கள் நடவடிக்கைகளை ஒருசேர இணக்கமுடன் செய்யும் ஏற்பாடு எதுவும் இல்லை,"

என்றும் அவர் குற்றஞ் சாட்டியிருக்கிருர்.

"ஆனுல் மைசூரை பொறுத்த மட்டில், சர்க்கார் இயந்திரத்தைக் கட்டுப்படுத்தி இணக்கமாக வேலை செய்கிற தன்மை எங்களிடமிருக்கிறது,"

என்றும் மைசூர் முதல்வர் எடுத்துக் காட்டியிருக்கிருர்.

"மத்திய சர்க்காரிடம் குவிந்துகிடக்கும் விரிவான வேலைகள், பரவலாக்கப்பட வேண்டுவதும் மிக அவசியமானதாகும்,"

என்றும் அனுமந்தையா இடித்துரைத்திருக்கிருர்.

பர்மிய அரிசி இறக்குமதி

5 ஆண்டுகளில் 20 இலட்சம் டன் இந்தியாவிற்கு வரும்

உள்நாட்டில் அரிசி விலை இறங்குவது நிச்சயமாம்!

புதுடில்லி, மே 28—

"டன் ஒன்று ரூ. 453 வீதம் (34 பவுண்டு) இந்த 1956-ம் ஆண்டில், இந்திய சர்க்கார், பர்மாவிலிருந்து அரசி வாங்குவர்"

என்று, மத்திய உணவு இலாகா உதவி மந்திரி எம். வி. கிருஷ்ணப்பா, மக்கள்சபையில் தெரிவித்திருக்கிருர்.

அடுத்த மாதத் துவக்கமுதல் 5 ஆண்டுகளுக்குள்ளாக இந்தியா 20 இலட்சம் டன் பர்மிய அரிசி வாங்க உத்தேசித்திருக்கிறது என்றும் அவர் கூறினர்.

பர்மா அரிசி இறக்குமதியாகத் துவங்கியவுடன் உள் நாட்டில் அரிசி விலை இறங்குவது நிச்சயம் என்றும் அந்த மந்திரி கூறியிருக்கிருர்.

'பர்மா மார்க்கெட்டில் விற்கப்படும் விலையைவிட இந்தியா தரப் போகும் விலை அதிகமல்லவா?' என்று கேட்கப்பட்டபோது 'இல்லை' என்றும், 'பர்மாவில் தனிப்பட்ட அரிசிச் சந்தை கிடையாது' எனவும், 'பர்மிய சர்க்காரே அரிசி விற்பனைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது' எனவும், 'அங்கு இப்போது டன் ஒன்று ரூ 480 என்ற அளவில் விற்கப்படுகிறது' எனவும், 'இந்தியா தரப்போவது ரூ. 453-தான்' என்றும், அந்த மந்திரி பதில் தெரிவித்திருக்கிருர்.

'இனி ஒருபோதும் அமெரிக்காவுக்குத் திரும்பமாட்டேன்'

சார்லி சாப்ளின் கருத்து

லண்டன், மே 28—

"அமெரிக்காவிற்கு திரும்பிச் செல்லும் எண்ணம் தனக்கு இனி ஒருபோதும் வராது,"

என்று, பிரபல சினிமா நடிகரான சார்லி சாப்ளின் தெரிவித்திருக்கிருர்.

"அமெரிக்க மக்கள்மீது நலநேதும் இல்லை; ஆனுல், அமெரிக்கத் தலைவர்கள்தான் அழிவு வேலையில்—பதனழிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிருர்கள்," என்றும் அவர் கூறியிருக்கிருர்.

மராட்டியர் கிளர்ச்சி!

போலீசார் தடியடிப் பிரயோகம்

75 தொண்டர்கள் கைது!

பம்பாய், மே 27—

சம்யுக்த மராட்டியக்கோரி, கிர்காம் பகுதியில், 'சத்தியாக்கிரக'த்தில் ஈடுபட்ட மராட்டியர் மீது, இன்று பம்பாய் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது 75 தொண்டர்களையும் போலீசார் கைது செய்திருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

சம்யுக்த மராட்டியக் கிளர்ச்சி—பம்பாய் மராட்டியருக்குத் தரப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

சி. ஆர்.—சி. பி. மோதல்

'இந்திய சர்க்கார், தங்களது இராணுவத்திற்காகச் செலவிடும் பெருந் தொகையைக் குறைக்க வேண்டும்' என்று, அன்பர் ஆச்சாரியார், காஞ்சி சர்வோதய சம்மேளனத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருந்தார்.

சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய டாக்டர் சி. பி. இரமசாமி, இந்தியா இராணுவ பலத்தைக் குறைக்கவேண்டுமென்ற கருத்தை எதிர்த்துப் பேசினர்.

"பாகிஸ்தான் தனது இராணுவ பலத்தைக் குறைத்துக்கொள்ள மறுக்கும்போது, இந்தியா மட்டும் எதற்காக தன் இராணுவ பலத்தைக் குறைக்க வேண்டும?" என்று வினவினர் அவர்!

எவரெஸ்டை எட்டிய இன்னெரு குழு!

காட்மண்டு, மே 28—

உலகிலேயே மிக உயரமானதும், சுமார் 29,000 அடிகொண்டதுமான இமயமலையின் எவரெஸ்ட் சிகரத்தை சுவிட்சர்லாந்து குழு ஒன்று, மே திங்கள் 23-24-ந் தேதியன்று ஏறிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

எவரெஸ்டின் மலையுச்சியை அடைய முதல் முயற்சி 1921-ல் மேற்கொள்ளப்பட்டது; 1953-ம் ஆண்டில்தான் வெற்றி கிடைத்தது. இதுவரை எவரெஸ்ட் சிகரத்தை அடைய 12 குழுக்கள் வந்திருக்கின்றன. இவற்றில் 9-பிரிட்டிஷ் குழுக்கள்; மற்றவை சுவிஸ் குழுக்கள்.

இதுவரை எவரும் ஏருத இமயமலையிலுள்ள 27,970 அடி உயரம் வாய்த்த மற்றொரு சிகரமான லோட்சி சிகரத்தையும் சுவிஸ் குழுவினர் ஏறி இருக்கின்றனராம்.

மூன்றுண்டுகட்கு முன்னர் பிரிட்டிஷ் மலையேறி எட்மாண்டு ஹிலோரியும், நேப்பான ஷெர்ப்பா டென்சிங்கும் எவரெஸ்ட் சிகரத்தை எட்டியது நினைவிலிருக்கலாம்.

'தினத்தந்தி'யின் வழக்கமான ஈனச் செயல்!

28—5—56 திங்கள் காலை 'தினத் தந்தி' இதழின் 3-ம் பக்கத்தில் 'புரோகிதர்களை வழி மறித்த கருப்புச் சட்டை வாலிபர்கள்' என்ற தலைப்பில் (தேதி, நபர்கள் பெயர் குறிப்பிடாமல்). சாமி ஊர்வலத்தில் புரோகிதர்கள் பாடிகொண்டு வருவதைக் கிண்டல் செய்தும், 'டேய்! தொப்பையைப் பாருடா! பூணூலே அறுடா!' என்று கூச்சல் போட்டதாகவும், உடனே புரோகிதர்கள் தாழ்ந்து, 'வேண்டாம், இந்தக் கலாட்டா' என்று கூறியதாகவும், அதைக் கேட்காமல் கருப்புச் சட்டைக்காரர்கள் ஓட்டம் பிடித்ததாயும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மேலே கண்ட நிகழ்ச்சிகள் யாவும் உண்மையல்லவென்றும், இது, 'தினத் தந்தி' பத்திரிகையின் புளுகு செய்திகளில் ஒன்று என்றும் திருப்பாதிரிப்புலியூர் தி. மு. க. கிளைச்செயலாளர் எ. எஸ். இராமச்சந்திரன் அறிவிக்கிறார்.

சென்ற வருடம் இந்தியாவிலிருந்து சுமார் ரூ. 1,26,34,326 பெருமானமுள்ள மோட்டார் எண்ணெய் (மோட்டார் ஸ்பிரிட்,) ஏற்றுமதியாயிற்று. சுமார் ரூ. 23,39,398 ரூபாய் மதிப்புள்ள உச்ச அளவு மோட்டார் எண்ணெய் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

அதிகாரங்கள் எல்லாம் டெல்லியிடம் குவிகின்றன

மாநில சர்க்கார்கள் வெறும் தபால் பெட்டிகளாகக் காட்சியளிக்கின்றன

அதிகாரம் ஓரிடத்தில் குவிவது ஆபத்தானது

"பணக் குவியலைவிட அதிகாரக் குவியல் இன்னும் ஆபத்தானது. குவியல் உள்ள இடத்தில் மமதைதான் வளருமே தவிர, காரியம் எதுவும் உருப்படியாக நடைபெறுது.

"உள்ள முதலாளிகளையெல்லாம் ஒழித்துவிட்டு, சர்க்கார், பெரிய முதலாளியாக மாறி விடுகிறது. இந்த பெரிய முதலாளி தவறு செய்தால் யார் திருத்துவது? இந்தக் கேள்வியைத்தான் காந்திஜியும் கேட்டார்.

"நாளுக்கு நாள் மத்திய சர்க்காரின் அதிகாரம் குவிந்து கொண்டே போகிறது. இதற்குப் பிராயச்சித்தமாகத்தானே என்னவோ, காந்திஜி சமாதி மீது தினமும் மலர்மாலையை சமர்ப்பித்து விடுகிறார்கள்.

"பெரும்பாலான விவகாரங்களில், ராஜ்ய சர்க்கார், டில்லிக்கு ஒரு தபால் பெட்டியாக காட்சியளிக்கிறது. சிறிது விளக்கமாகச் சொல்லப் போனால் ராஜ்ய சர்க்காரின் கீழ் முனிசிபாலிடி எப்படி இருந்து வருகிறதோ அதே போன்றுதான், மத்திய சர்க்காரின்கீழ் ராஜ்ய சர்க்காரும் இருந்து வருகிறது.

"டில்லியில் புதுப் புது அதிகாரமும் குவிந்துகொண்டே போகிறது; புதுப் புது மந்திரிகளும் பெருகிக்கொண்டே போகிறார்கள். 'டில்லி, பாரதத்தின் கலாசாரத்தை பிரதிபலிக்கவில்லை; அங்கு கூத்தும், குடியும் பெருகிவிட்டது; இந்தியாவின் தலைநகராக இருப்பதற்கு டில்லி ஏற்றதல்ல,' என்று வினோபாஜி வருத்தப்படுகிறார்.

"அதிகாரம் மக்களின் கையில் இருக்கவேண்டுமானால் மக்களின் பிரதிநிதிகள் கையில் அது பரவலாக இருக்கவேண்டும். கிராமப் பஞ்சாயத்துகளுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? நியாயமாகப் பார்க்கப்போனால், அதிகாரத்தின் அஸ்திவாரம் அவைகளின் கையில் இருக்கவேண்டும்.

"அதிகாரக் குவியலினால், மந்திரிகளின் பெருக்கம்தான் கண்ட பலன்! யுத்த காலத்தில் மத்திய சர்க்காருக்கு இருந்த வேலைகள் கொஞ்ச நஞ்சமல்ல; வைஸ்ராய் நிர்வாகக் கவுன்சிலில் பத்துப் பேர் இருந்து ஆட்சி செய்த இடத்தில், இப்போது 51 மந்திரிகள் இருக்கிறார்கள்! இதுவும் போதாதென்று மேலும் ஓரிரு மந்திரிகளை நியமனம் செய்யக் கூடுமென்றும் செய்தி வருகிறது.

"இந்தக் கூத்தைப் பாருங்கள்! தொழில் வர்த்தக இலாகாவுக்கு ஒரு மந்திரி; இத்துடன், தொழிலுக்கு ஒரு தனி மந்திரி; வர்த்தகத்துக்கு ஒரு தனி மந்திரி; சிறு தொழில்களுக்கு இன்னொரு மந்திரி! எல்லாவற்றிற்கும் மேலாக சர்க்காரின் தொழில் நிலையங்களுக்கு வேறொரு மந்திரி! பாதுகாப்பு இலாகாவுக்கு ஒரு மந்திரி! பாதுகாப்புச் செலவு இலாகாவுக்கு இன்னொரு மந்திரி!

"அதிகாரம் மட்டும் பரவல் முறையில் அமையுமானால், டில்லியில் இவ்வளவு மந்திரிகளுக்கும் அவசியமில்லை; அத்துடன், நிர்வாகமும் சீர்படும்.

"டில்லிக்குச் சென்று அவஸ்தைப் பட்டுத்திரும்பிய அனுபவசாலிகளைக் கேட்டால், 'ஒரு விஷயம் எந்த இலாகாவைச் சேர்ந்தது என்பதைக் கண்டு பிடிக்கவே ஒருவார காலமாகிறது' என்கிறார்கள். சகலமும் அதிகாரக் குவியலில் வந்தவினை!

"அறுக்கமாட்டாதவன் இடுப்பில் ஐம்பத்தெட்டு அறுவாள்களை சொருகுவதால் யாருக்குப் பலன்? அதற்குப் பதிலாக அறுக்கமுடிகிறவர்களுக்கு பகிர்ந்து கொடுத்துவிட்டால் வேலையும் ஜரூராக இருக்கும்; மக்களும் பலனடைவார்கள்."

—[28-5-56 'நவ இந்தியா' இதழில் 'ஊர்வம்பு' எனும் தலைப்பில் 'யு. ஆர்.' என்பார் எழுதியுள்ளவற்றில் சில பகுதிகள் தான் மேலே தரப்பட்டுள்ளவையாகும்]

சொந்த வீடு கொண்ட பிச்சைக்காரர்கள்

ருசிகரமான தகவல்களைத் தந்த ஆராய்ச்சி

ஐதராபாத், மே 27—

பிச்சைக்காரர்களில் பலர், தொழில்களில் ஈடுபட்டிருக்கும் குறைந்த வருமானமுடைய தொழிலாளர்களைக் காட்டிலும், மிகச் சவுகரியமான வாழ்வு பெற்றிருக்கிறார்களாம்.

இங்கு சுமார் 600 பிச்சைக்காரர்களின் வாழ்க்கை நிலை பற்றி, ஒரு 'சர்வே' மேற்கொள்ளப்பட்டபோது இந்தத் தகவல் கிடைத்திருக்கிறதாம்.

ஐதராபாத் இந்தியப் பொருளாதார கழகத்தவர் இந்த 'சர்வே'யை நடத்தினராம்.

இந்தப் பிச்சைக்காரர்களின் சராசரி மாத வருமானம் ரூ. 20—6—0 என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

இவர்களில் 171 பேர்களுக்கு சொத்துக்கள் இருக்கிறதாம்.

152 பேர் கடனாளிகளாயிருக்கின்றனராம். 142 பேர்களுக்கு சொந்தத்தில் வீடுகள் அல்லது குடிசைகள் இருக்கின்றனவாம்.

136 பேர் வாடகை வீடுகளில் வசிக்கின்றனராம்; எஞ்சியவர்கள் வீடின்றித் தவிக்கிறார்கள்; அல்லது, வாடகையில்லாத வீடுகளில் வசிக்கிறார்கள் என்று தெரிய வந்துள்ளது.

எட்டு பிச்சைக்காரர்கள் தாங்கள் விசாரணை செய்யப்படுவதை விரும்பவில்லையாம்.

592 பேர்களில் 51 பேர் நல்ல திடகாத்திரத்துடனும், 373 பேர் நல்ல உடல் நிலையிலும் இருப்பவர்களாம்!

168 பேர் தேகநலம் கெட்டுப் போனவர்கள் என்றும், 40 பேர் முழுக் குருடர்கள் என்றும், 23 பேர் பாதிக் கண் பார்வை இழந்தவர்கள் என்றும், 12 பேர் செவிடர்கள் என்றும், 88 பேர் அங்கஹீனர்கள் என்றும், 21 பேர் குட்டநோய் கண்டவர்கள் என்றும் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறதாம்.

மேலும் இந்த விசாரணையின் போது, இவர்கள் பிச்சைக்காரர்களாயிருப்பதற்கான காரணங்களும் அறியப்பட்டுள்ளனவாம்.

சிலர் வயோதிகமடைந்துவிட்டமையாலும், சிலர் பரம்பரைப் பழக்கத்தாலும், சிலர் வேலை இல்லாத் திண்டாட்டம், பற்றாக்குறை வருமானம் இவற்றாலும், சிலர் புத்திரசோகத்தினாலும் பிச்சைக்காரர்களாகிவிட்டவர்களாம்.

சிலர் நேரடியாகவே பிச்சைக் கேட்பதாயும், சிலர் பாட்டுப் பாடுதல், 'புண்ணிய ஸ்தலங்கள்' பெயர் கூறிக் கேட்டல், குழந்தைகளைக் காட்டி அவற்றைக் காப்பாற்ற என்றுகூறி பிச்சைக் கேட்பவர்களாயும் உள்ளனராம்.

சிலர் மட்டுமே, தங்களால் பிச்சை எடுப்பதைத் தவிர வேறு வழி இல்லாத நிலையை எடுத்துக் கூறி பிச்சை கேட்கின்றனராம்.

இந்தப் பிச்சைக்காரர்களை அழைத்து 'சர்வே' நடத்தும் போது கேள்விகள் கேட்கப்பட்ட பின், ஒவ்வொரு பிச்சைக்காரருக்கும் ஒரு அணா அல்லது அரை பவுண்டு சோளம் தரப்பட்டதாம்.

600 பேரில் 7 பேர் இந்த அணாவையோ சோளத்தையோ வாங்க மறுத்துவிட்டனராம்; காரணம், தாங்கள் பிச்சை எடுக்கும் நேரம் வீணாக்கப்பட்டதற்கு நஷ்டஈடாகத் தரப்படும் பொருள் மிகவும் குறைவானது என்று கூறினராம்!

'குறுகிய மனப்பான்மையும் சீர்குலைவும் நிலவுகிறது'

காங்கிரசில் நிலவும் ஊழல் பற்றி பாதுகாப்பு அமைச்சர்

அலகாபாத், மே 25—

"காங்கிரஸ் அமைப்பிலுள்ள குறுகிய மனப்பான்மையையும், குழு மனப்பான்மையையும் எதிர்த்துப் போராட விரைவிலேயே தக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் காங்கிரஸ் அமைப்பிற்கும் நாட்டிற்கும் பெரும் இழப்பு ஏற்படும்" என்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் மகாவீர் தியாகி எச்சரிக்கை செய்துள்ளார் எனத் தெரிகிறது.

"காங்கிரசில் இன்று ஏற்பட்டுள்ள சீர்குலைவையும், தாழ்வையும் போல என்றுமே நான் காங்கிரசில் கண்டதில்லை. தங்களுடைய குறைபாடுகளை உணர்ந்து நடக்காதவரையில் எந்த நாடும், எந்த நிறுவனமும் முன்னேற்றம் அடையாது" என்று அவர் கூறியுள்ளார்.

தபால் மூலம்!

'வாக்கு' அளிக்க இயலாதாம்!

புதுடில்லி, மே 27—

"பட்டதாரிகள், ஆசிரியர்கள், தலத்தாபனங்கள் தேர்தல் தொகுதிகளிலிருந்து மாநிலங்கள் மேல் சபைத் தேர்தல்களுக்கு, தபால் மூலம் வாக்களிக்கும் முறையைக் கையாள்வதால் ஏற்பட்டிருந்த குறைபாடுகள், துஷ்பிரயோகங்கள் ஆகியவை பற்றி தேர்தல் கமிஷனுக்குக் கடுமையான புகார்கள் வந்துள்ளன; சில விஷயங்களில், விசாரணை நடத்திப் பார்த்தபோது, அந்தப் புகார்கள் நியாயமானவையெனத் தெரிய வந்திருக்கிறது; ஆகவே, மேல் சபைக்கு இனி மேல் நடத்தப்படும் இத்தகைய எல்லா தேர்தல்களிலும் தபால் மூலம் வாக்களிக்கும் முறைக்குப் பதிலாக, வாக்காளர்கள் நேரில்வந்து வாக்களிக்கும் முறையைக் கையாள்வதென்று தேர்தல் கமிஷன் முடிவு செய்திருக்கிறது. எனினும் தற்போது நடைபெற்று வருகிற அத்தகைய தேர்தல் எதற்கும் இந்த முடிவு பிரயோகமாகாது" என்று, இந்திய சர்க்கார் செய்தி இலாகா அறிக்கை ஒன்று கூறுகிறது.

கரக்பூர் விபத்துக்குக் காரணமானவர்கள்

'கொடிய குற்றவாளிகளாவர்' —நேரு

புதுடில்லி, மே 28—

'கரக்பூர் விபத்தை நிகழச் செய்ததைவிட, மிருகத்தனமான—கொடுங்குற்றம் மிகுந்த செயல் வேறு இருக்க முடியும் என நான் எண்ணவில்லை,' என்று, மக்கள் சபையில் பிரதமர் நேரு தெரிவித்திருக்கிறார்.

'உள்ளூரில் உள்ள தொழிலாளர் சங்கம நேரடியாகவோ, மறைமுகமாகவோ இதற்கு உடந்தையாயிருந்திருக்கிறார்கள். அவர்கள் தொழிற் சங்கத்தவர்கள் என்று கூறிக்கொள்வதற்கே லாயக்கற்றவர்கள்,' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

* * *

22 நாள் வேலை நிறுத்தம் முடிவுற்றது

100 தொழிலாளர்கள் கைது

கல்கத்தா, மே 28—

கடந்த 22 நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த இரயில்வே தொழிலாளர்கள் இன்று வேலைக்குத் திரும்பியிருக்கின்றனர்.

இங்கிருந்து 72 மைல் தொலைவில் உள்ள கரக்பூர் இரயில்வே, லேகோ தொழிற்சாலைகளில் பணிபுரியும் 11,900 தொழிலாளர்களும் அந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த சனியன்று நிகழ்ந்த விபத்தை ஒட்டி சுமார் 100 பேர் வரை இதுவரை கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது.

கடந்த 26-ந் தேதியன்று காயம் பட்டோர் எல்லாம் குணமாகி வருகின்றனராம்.

அலங்கார மண்டபம் இருக்காதாம்!

புதுடில்லி, மே 28—

"ராஜ கட்டத்தில் காந்தி சமாதியில் அலங்கார மண்டபம் ஒன்றும் இருக்காது; ஏற்கனவே அங்குள்ளதில் சிறு மாறுதல்கள் செய்வதற்கு மேல் அங்குவேறு மண்டபம் எதையும் கட்டக்கூடாதென இப்போது பலத்த கருத்து இருந்து வருகிறது. அவ்விதம் நடந்து கொள்வது பொருத்தமாகவும் இருக்கும். மிகவும் எளிய முறையிலேயே அவ்விடத்தை வைத்திருக்க ஆசைப்படுகிறோம்" என்று பிரதமர் நேரு மாநிலங்கள் சபையில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

திருச்சி மாநில மாநாட்டு புகைப் படங்கள்

திருச்சியில் நடைபெற்ற தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிகழ்ச்சிகளை புகைப்படமெடுத்துள்ள புகைப்பட நிலையங்கள், பத்திரிகையாளர்கள், தோழர்கள் எல்லாம், ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் வீதம், தலைமை நிலையத்தில் சேகரித்து வைப்பதற்காக அனுப்பி உதவுமாறு கோரப்படுகிறார்கள்.

தி. மு. க. தலைமை நிலையம்
'அறிவகம்,' சென்னை—18

உத்திரவு தந்தால்!

விமான ஆற்றல்கள் குறித்து தளபதியின் குறிப்பு

வாஷிங்டன், மே 26—

"உத்திரவு தந்தால் சில நிமிடங்கள் அல்லது சில மணிநேரத்தில் அணுகுண்டுகளுடன் மாஸ்கோவுக்கும், ரஷ்யாவின் மற்ற நூற்றுக்கணக்கான இலக்குகளுக்கும் பறக்க அமெரிக்கக் குண்டு வீசும் விமானங்கள் தயாராக இருக்கிறது. போர் மூளுமாயின் தாக்குவதற்குத் தளங்களும், மற்றைய தளபதிகளுக்கும் ஏற்கனவே இலக்குகளை கட்டளை இராணுவத் தலைமை ஒதுக்கியுள்ளது"

என்று, அமெரிக்க விமானப் படைத் தளபதி கூறியுள்ளாராம்.

ரஷ்யா திடீரென அமெரிக்காவைத் தாக்க தீர்மானித்தால் 70 சதவிகித ரஷ்ய குண்டு வீசும் விமானங்கள் அமெரிக்க பாதுகாப்புகளைத் தாண்டி வந்துவிடும் என்றும், முதல் தாக்குதலில் நன் தலைமையிலுள்ள சில குண்டுவீசும் விமானங்களும், விமான தளங்களும் நாசமடையும் என்றும், அணுசக்திப்படை முழுவதற்குமாக ஒரே தளபதி வேண்டுமென்றும், அடுத்த போரில் ரஷ்யாவின் விமான ஆற்றல் அமெரிக்காவைவிட அதிகரித்துவிடப் போகிறதென்றும் அவர் எச்சரித்தாராம்.

பூட்டுத் தயாரிப்புத் தொழிற்சாலை

விரைவில் திண்டுக்கல்லில் ஆரம்பிக்கப்படுமாம்

மதுரை, மே 28—

திண்டுக்கல்லில் பூட்டுகளை தயாரிக்க ஒரு தொழிற்சாலையும், பயிற்சி நிலையத்தையும் துவக்க மாநில அரசினரின் தொழில் இலாகா திட்டமிட்டுள்ளதெனத் தெரிகிறது.

பூட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கு வேண்டிய கருவிகளையும், முக்கிய சாமான்களையும் தொழிற்சாலை தயாரித்துக் கொடுக்கும் என்றும், மாதிரி சாவிகளும் வார்க்கப்பட்டு பித்தளை பாகங்களும் தயாரிக்கப்படுமென்றும், கச்சாப் பொருள்களை மொத்தமாக வாங்கி வாங்கின விலைக்கே அவற்றை தொழிலாளருக்கு விநியோகிக்கும் என்றும் தெரியவருகிறது.

பித்தளை, இரும்புத் தாம்பாள்கள், மேசை, பெட்டி பூட்டுகள் ஆகியவை தயாரிப்பிலேயே இத் தொழிற்சாலை ஈடுபடுமாம்; பயிற்சி நிலையத்தில் 20 பேர்களுக்கு ஓராண்டிற்கு பயிற்சி தரப்படுமாம்.

இத்திட்டத்திற்கு மொத்தமாக ரூ 8,92,000 செலவாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புனர்வாழ்விப்பு நிதி நிர்வாக நிறுவனம், 1956 மார்ச் மாதம் வரை இடம் பெயர்ந்தவர்களுக்குக் கடனாக மொத்தம் ரூ 1,256 96 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. இத்தொகையில் ரூ. 822,46 இலட்சம் மேற்குப் பாகிஸ்தானிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கும், ரூ. 434,50 இலட்சம் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கும் வழங்கப்பட்டது.

சிங்கப்பூர் இந்திய வியாபாரிகளின் துரோகச் செயல்?

இலட்சக்கணக்கான டாலர் மதிப்புடைய பண்டங்கள் கோவாவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாம்!

சிங்கப்பூர், மே 29—

கோவாவிற்குள் எந்தவித பண்டங்களும் செல்லக்கூடாது என இந்தியப் பேரரசு தடுப்பு நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது. அதை முறியடிக்கும் வகையில், சிங்கப்பூரில் உள்ள இந்திய வியாபாரிகள் இலட்சக்கணக்கான டாலர் மதிப்புடைய உபயோககரமான பண்டங்களை கோவாவிற்கு அனுப்பி வருகின்றனராம். பலப்பல வியாபாரிகளின் பெயர்களை உபயோகப் படுத்தி, பண்டங்கள் அனுப்பப்பட்டு வருகின்றனவாம். பெருத்த இலாபத்தில் அத்துரோக வியாபாரம் நடத்தப்படுகிறதாம்.

இத்தகவலை, சீனர்களால் வெளியிடப்பட்டுவரும் 'சிங்கப்பூர் ஸ்டாண்டர்ட்' என்ற ஆங்கில தினசரி, பிரசுரித்து இருக்கிறது.

சிங்கப்பூர் இந்திய வியாபாரிகள் சங்கத் தலைவரான டி. டி. அஷோமுல், என்பவர், மேற்படி செய்தியை ஆதாரமற்றது என மறுத்தனர்.

ஈ. வெ. கி. சம்பத் ஆய்வுரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்த உரிமைகள் மக்களுக்குத் தரப்படுதல் வேண்டும் என்று போராடினர்களோ அந்தக் கொள்கைகளுக்கு விரோதமாகப் பேசத் தலைப்பட்டார்கள்; 'நாட்டுப் பிரிவினைக்கூடாது. திராவிடநாடு அமைப்பது தீதானது; தமிழர்கள் என்பவர் ஒரு தேசிய இனத்தவரா? திராவிடர்கள் என்பது, வரலாற்றிலேயே இல்லாத அபத்தமான சொல்லாயிற்றே' —என்று பேசமுற்பட்டார்கள்.

"பிரிந்துபோகிற உரிமை—தனியரசு அமைத்துக்கொள்கிற உரிமை திராவிட இனத்திற்கு வேண்டுமென்று கேட்பது தவறு; அந்த உணர்ச்சியே தீதானது—என்று, முன்பு தாங்கள் சொல்லிவந்த கொள்கைக்கு முரணாக, அந்தக் கொள்கைகளுக்குத் துரோகமிழைக்கும் வகையில் பேசுகிறார்கள்!

"இவைத நான் இத்தனை விளக்கமாக எடுத்துச்சொல்லுவதற்குக் காரணம், இந்த கம்யூனிஸ்டுகள் கொள்கை குழப்பத்திற்கு ஆளாகியுள்ள இந்த விவகாரத்தில், நமது அடிப்படை இலட்சியம் சிக்கிக்கொண்டிருக்கிறது என்பதினால்தான்!

"இந்த ஒரு துறையில் மட்டுமல்ல—ஒரு பிரச்சினையில் மட்டுமல்ல—கம்யூனிஸ்டுகள் முன்னுக்குப்பின் முரணாகப் பேசுவது!

"அவர்கள் தோன்றிய நாளிலிருந்து இன்றுவரை எந்த ஒரு சிறிய பிரச்சினையிலேனும், முன் சொன்னதிலிருந்து விலகாமல் நிலை நின்றார்கள்—அன்றுமுதல் இன்றுவரை, கூறிய கொள்கையை ஒலித்துக் கொண்டிருக்கிறார்கள்—என்று காட்ட முடியுமா என்றால், நிச்சயம் முடியாது!

"அது, அகில உலகப் பிரச்சினையானாலும் சரி—அகில இந்தியாவிற்குமான பிரச்சினையானாலும் சரி—தமிழ் நாட்டைப் பற்றிய பிரச்சினையானாலும் சரி—திருப்பூரில் உள்ள ஆலைத் தொழிலாளர் பிரச்சினையானாலும் சரி—அன்று முதல் இன்றுவரை, ஒரு அடிப்படை இலட்சியத்தைத் தங்கள் கோஷத்தின் ஆக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறார்களா என்றால், இல்லை!

"அன்னிய நாட்டுக் கொள்கையை எடுத்துக்கொண்டால் இந்தக் கம்யூனிஸ்டுகள் எங்கெங்கோ ஏறி, எங்கெங்கோ விழுந்து, படுகாயப்பட்டு, எதை எதையோ இழந்து தவித்திருக்கிறார்கள் என்பது குறித்து இந்திய அரசியலின் குறுகிய கால வரலாறு, ஏராளமாக தன்னகத்தே அடைத்து வைத்துக்கொண்டிருக்கிறது,"

—என்று தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், 'இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்' என்றதலைப்பில், திருச்சி மாநிலமாநாட்டில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார். அவரது சொற்பொழிவின் முதற்பகுதி நேற்றுத் தரப்பட்டது. தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது:—

மேலும் தோழர் சம்பத் தொடர்ந்து பேசியதாவது:—

"1933-ல், இன்றுள்ள ஐ.நா. நிறுவனம்போல, அன்று இருந்த 'லீக் ஆப் நேஷன்ஸ்' என்ற சர்வதேச சங்கத்தில் ரஷ்யாவிற்கும் ஒரு இடம் அளிக்கப்பட்ட நாளிலிருந்து, அங்கே, ரஷ்யாதான் வெறியோடு பாசிசத்தைத் தாக்கிக் கொண்டிருந்தது. ரஷ்யாதான், 'பாசிஸ்டுகளை வளரவிடக் கூடாது; பாசிஸ்டுகள்—அதாவது இத்தாலி நாட்டு முசோலினி, ஜெர்மனியில் இட்லர், ஸ்பெயினில் முளைத்துக்கொண்டிருந்த பிராங்கோ—இவர்களை எல்லாம் ஒழித்துக்கட்ட வேண்டும்; பாசிசம் என்ற கொள்கை உலகில் வளரவிடக் கூடாது; பாசிசம் வளர்ந்தால், உலக மக்களின் நல்வாழ்விற்கு உலை வைக்கவே அது முற்படும்,' என்று ரஷ்யா பேசிவந்தது. 'பாசிசக் கொள்கைகளுக்குத் துணைபுரிகிறீர்கள்' என்று இங்கிலாந்தைக்கூட ரஷ்யா குற்றம்சாட்டி, பாசிசத்திற்கு எதிராக உரத்தக் குரலில் பேசி வந்தது.

"ரஷ்யா இப்படிப் பேச ஆரம்பித்தவுடன், உலகெங்கணுமுள்ள கம்யூனிஸ்டுகள், 'பாசிசத்தை ஒழிப்போம்; பாசிசம் வளருவது பேராபத்தாகும்; பாசிஸ்டுகளை முறியடித்தே தீர வேண்டும்' என்று, பட்டிதொட்டிகளில் எல்லாம்கூட முழங்க ஆரம்பித்தார்கள். இந்தியாவிலும் கம்யூனிஸ்டுகள் அப்படித்தான் அப்போது பேசினார்கள்.

"1939ல் உலகப்போர் துவங்கிற்று. அந்த நாள்வரை, 'பாசிஸ்டுகளை ஒழிக்க எவரோடு வேண்டுமானாலும் சேர்ந்து போராடுவோம்,' என்று பேசி வந்தனர், கம்யூனிஸ்டுகள்!

"திடீரென பத்திரிகையில் ஒரு நாள் செய்தி வந்தது; 'பாசிஸ்டுகள் முகாமிலேயே மிகவும் வெறிபிடித்தத் தலைவனாக விளங்கிய இட்லருடன் ரஷ்யா ஒரு அனாக்கிரமிப்பு ஒப்பந்தம்—ஒருவரை ஒருவர் ஆக்கிரமிப்பு செய்வதில்லை என்ற நட்பு உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்டது'—என்பதுதான் அந்தச் செய்தி!

"ரஷ்யாவிற்கும்—ஜெர்மனிக்கும் நட்பு உடன்படிக்கை ஏற்பட்டது என்று கேட்டதும், இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டுகள் திகைத்துப் போனார்கள்!

"பலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்—'போலீஸ் அடக்கு முறை வரும்போதுதான், கம்யூனிஸ்டுகள் தலைமறைவாகப் போய் விடுவர்'—என்று! ஆனால், எனக்கு நன்றாகத் தெரியும்—அவர்களுக்கு, தங்களின் கொள்கைக் குழப்ப சூடு தாங்க முடியாத போதும் 'அண்டர் கிரவுண்டி'ல் நுழைந்துவிடுவார்கள் என்று; மறுபடியும், கோமின் பாரமோ அல்லது அதன் 'இந்தியத் தபால் பெட்டி'யாக விளங்கிக் கொண்டிருக்கும் ஹாரி பாலிட்டோ வந்து கைகொடுத்துத் தூக்கும் போதுதான் வெளிவருவார்கள், இந்தியக் கம்யூனிஸ்டுகள் — புழுதியைத் துடைத்துக்கொண்டே அழுவார்கள்.

"பாசிஸ்டுகள் ஒழியவேண்டும் என்று சொன்னோம்; என்றாலும், இப்போது நடைபெறுகிற யுத்தம் ஏகாதிபத்தியங்களுக்கிடையில் நடைபெறும யுத்தம்; பாசிசத்தை ஒழிக்கும் யுத்தம அல்ல; என்று, ஜெர்மனி மீது மக்களுக்கு அனுதாபம் ஏற்படத்தக்க வகையில்—அதனை ஆதரிக்கும்போக்கில்—கங்கள் கொள்கைக்குத் துரோகமிழைக்கும்வகையில் பேசத் தலைப்பட்டார்கள்; இரண்டாண்டுகள்கூட ஆகவில்லை இந்த மாற்றத்திற்கிடையில்!

[பேச்சு முடியவில்லை: தொடர்ந்து வெளிவரும்]

தி. மு. க. மாணவர் மாநில மாநாட்டு வரவேற்புக் குழு

"3—6—56 காலை 10 மணியளவில், கோவை தியாகராயர் படிப்பகத்தில், தி. மு. க.—மாணவர் மாநில மாநாடு சம்பந்தமான மாணவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். கல்லூரி, உயர்நிலைப் பள்ளி, தொழில் கல்லூரி மற்றுமுள்ள மாணவர்கள் அனைவரும்—குறிப்பாக கோவை மாவட்ட மாணவர் கழகங்களின் செயலாளர்கள், பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்"

என்று, வரவேற்புக் குழுத் தலைவர் கோவை—செழியன் அறிவிக்கிறார்.

****

மாபெரும் பொதுக்கூட்டம்

3-6-56 ஞாயிறு மாலை 6-மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில்

தி. மு. கழகப் பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள்

மாநில மாநாட்டின் முடிவுகள்

குறித்து விரிவுரையாற்றுவார்கள்

—தி. மு. க. தலைமை நிலையம்

****

பகுத்தறிவு விவசாய மன்றம் திறப்பு விழா

1—6—56 மாலை 5-30 மணியளவில், மதுரை மாவட்ட மாரணிவாரியேந்தலில், மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து தலைமையில், மேற்படி மன்றத் திறப்பு விழா நடைபெறும்.

தோழர் என். எஸ். இராசா கொடியேற்று விழாவாற்றுவார்.

தோழர் அ பொன்னம்பலனார் மன்றத்தைத் திறந்து வைப்பார்.

புரட்சிநடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், மற்றும் பல தோழர்கள் பேசுவர்.

குறிப்பு:—தோழர் எம் ஜி இராமச்சந்திரன் அவர்களுக்கு, தலைவரவர்களால் 'நடிகக் கலை தளபதி' என்ற பட்டமளிப்பு விழா நடைபெறும்

பிறப்பு

மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் எஸ். முத்து அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி ரஞ்சிதம், 26—5—56ல், பெண் மகவு ஒன்றுக்குத் தாயானார்கள்; தாயும் சேயும் நலம்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா

1—6—'56 நிகழ்ச்சிகள்:

இயல் அரங்கு:

திரு டி எம். நாராயணசாமி (பிள்ளை) தலைமையில், கவர்னர் பிரகாசா பாண்டித்துரை தேவர் படத்தைத் திறந்துவைப்பார் திரு. ரா. பி. சேதுப் பிள்ளை—'தமிழர் பண்பாடு'; திரு. ஔவை சு. துரைசாமி (பிள்ளை)—'பழந்தமிழர் சமயம்'; திரு. ஜி. சுப்பிரமணிய (பிள்ளை)—'பண்டைய விளையாட்டுகள்'; திரு. பி. டி. இராசன்—'மேடைப் பேச்சு'—ஆகியதலைப்புகளில் சொற்பொழிவாற்றுவார்கள்.

இசை அரங்கு:

திரு. வி. முனுசாமி, எம்.பி. தலைமையில், திருமதி டி. கே. பட்டம்மாள் இன்னிசை விருந்து நடைபெறும்.

நாட்க அரங்கு:

திரு. கருமுத்து தியாகராச (செட்டியார்) தலைமையில், புரட்சி நடிகர் எம். ஜி இராமச்சந்திரன் குழுவினரின் 'சுமைதாங்கி' நாடகம் நடைபெறும்.

திருமணங்கள்

1—6—56 காலை 10-30 மணியளவில், மதுரை மாவட்டம் வடுகபட்டி, பெரியய்யா பூசாரி பேட்டையில், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில், தோழர் வி. சே. இராசாராம்—தோழியர் சுலோசனா திருமணம் நடைபெறும். தோழர்கள் எஸ். முத்து, வசனப்பித்தன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

* * *

1—6—56 காலை 9 மணியளவில், சேலம்—சிவதாபுரம் மணமகன் இல்லத்தில், தோழர் சி. சித்தையன் தலைமையில் தோழர் எஸ். ஆறுமுகம்—தோழியர் சரோசா திருமணம் நடைபெறும். தோழர்கள் ஏ. சிவப்பிரகாசம், சே. வடிவேல், ஆ கிள்ளிவளவன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

* * *

1—6—56 காலை 9 மணியளவில், சென்னை—ரெட்டில்ஸ், காந்தி தெரு, மணமகன் இல்லத்தில், தோழியர் சகுந்தலா—தோழர் தேவராசன் திருமணம் நடைபெறும்.

* * *

1—6—56 காலை 6 மணியளவில், பெரியகுளம்—வடக்கரை மணமகன் இல்லத்தில், தோழர் பி. சாகுல் அமீது—தோழியர் மதினா பேகம் திருமணம் நடைபெறும்.

தட்சிணப்பிரதேச ஆதரவாளருக்கு வினோபா பாவே சூடு!

'மொழிவழி மாநிலம் அமைய வேண்டும்—அது தவறான கோரிக்கை அல்ல'

'மொழி வெறிதான் ஆபத்தானது'

'சிறுபான்மை மொழியினருக்குப் பாதுகாப்புவேண்டும்'

காஞ்சி, மே 28—

"மொழிவழி மாநிலங்கள் அமைய வேண்டுமென்பதில் தவறில்லை; அஞ்ச வேண்டியது எல்லாம், மொழிவெறி குறித்துத்தான்,"

என்பதாக ஆச்சாரிய பாவே குறிப்பிட்டிருக்கிறார்.

"மொழிவழி மாநிலம் வேண்டுமென்பது இந்தக்கால கட்டத்தில் எழுந்துள்ள இயற்கையான ஒரு கோரிக்கையாகும்; மேலும் மக்கள் தங்கள் சொந்த மொழியிலேயே ஆட்சி நடைபெற வேண்டும் என்ற இயற்கையான ஆவல் கொண்டவர்களாயுமிருக்கின்றனர்; எனவே, மொழிவழி மாநிலம் அமைய வேண்டுமென்பது எந்த வகையாலும் தவறானதல்ல ஒரு குறிப்பிட்ட மொழிப்பிரதேசத்தில் வாழும் இதர சிறுபான்மை மொழியினருக்கு கஷ்டங்கள் நேராத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும்—அவ்வளவுதான்"

என்றும் வினோபா பாவே கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.